
# பரராசசேகரம்

## முதலாம் பாகம்

1



மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம்
வட மாகாணசபை

# பரராசசேகரம்

முதலாம் பாகம்

(மீள்பதிப்பு)

மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம்
வட மாகாணசபை.

**நூல்** :- பரராசசேகரம் (முதலாம் பாகம்)

**முதற்பதிப்பாசிரியர்** :- ஏழாலை ஐ.பொன்னையபிள்ளை

**மீள்பதிப்பு** :- மாகாண சுதேச மருத்தவத்திணைக்களம் வட மாகாணசபை.

**பதிப்பு** :- டிசம்பர் 2016

**பிரதிகள்** :- 1000

**அச்சுப்பதிப்பு** :- வைரஸ் பிறிண்டேஸ்

## வடமாகாண கௌரவ ஆளுநரின் ஆசிச்செய்தி

**"பரராசசேகரம்"** மருத்துவத் தமிழ் நூல் மீள்பதிப்புக்கு எனது ஆசிச்செய்தியை அனுப்புவதில் பேருவகையடைகிறேன்.

நூலின் மீள்பதிப்பு முயற்சி வெற்றிபெற இறைவனின் ஆசியை வேண்டுகிறேன்.

**"பரராசசேகரம்"** என்பது யாழ்ப்பாண பரராசசேகரன் மன்னனால் 12 மருத்துவர்களின் உதவியுடன் இயற்றப்பட்ட மருத்துவத் தமிழ் நூல் ஆகும் எனவும் பரராசசேகரன் என்ற பட்டப்பெயருடன் பல அரசர்கள் இருந்துள்ளனர் எனவும் இந்த நூல் 14 - 16 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியை சேர்ந்ததாகவும் இதன் நூல் 12000 செய்யுள்களால் அமைந்தது என்று கூறப்படினும் 8000 செய்யுள்களே அச்சில் வந்துள்ளன. என்பதையும், இந்த நூல் அகத்திய வைத்திய சிந்தாமணி, தந்வந்திரி வைத்திய சிந்தாமணி ஆகியவற்றைத் தழுவியே எழுந்தது என்றும் "பரராசசேகரம்" எனும் மருத்துவத் தமிழ் நூல் பற்றிய தகவல்களை வேறு தமிழ் அறிஞர் நூல்களின் மூலமாக பெறமுடிந்தது.

ஆகையினால் இத்தகைய மருத்துவப் பெறுமதியும் வரலாற்று விழுமியமும் நிறைந்த **"பரராசசேகரம்"** எனும் மருத்துவத் தமிழ் நூல் அழிந்தொழிந்து போகாமல் காப்பாற்றப்படுவதுடன் அதன் உள்ளடக்கமாகவுள்ள மருத்துவக்குறிப்புக்களும் விளக்கங்களும் சந்ததி சந்ததியாக கையளிக்கப்படுவதன் மூலமாக தமிழர் மருத்துவப் புலமை அனைத்து மக்களுக்கும் பயன்படவேண்டும். **"பரராசசேகரம்"** மருத்துவத் தமிழ் நூல் மீள் பதிப்பு செய்வதன் நோக்கமும் அதுதான்.

மீள்பதிப்புப் பணியை பொறுப்பேற்று நிறைவேற்றும் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தைப் பாராட்டி வாழ்த்துகிறேன். **"பரராசசேகரம்"** மருத்துவத் தமிழ் நூலின் மீள்பதிப்பு நூல்கள் மருத்துவர்களையும் மாணவர்களையும் அத்துறையில் அறிவை வளர்க்க விரும்பும் ஏனைய மக்களையும் சென்றடைந்து அவர்கள் பயனடையவேண்டும் எனவும் வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.

நன்றி

ரெஜினோல்ட் கூரே,
ஆளுநர்,
வடமாகாணம்.

## வடமாகாண கௌரவ முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணத்தின் மன்னர் ஆட்சிக் காலத்தில் குறிப்பாக பரராஜசேகரன் ஆட்சி புரிந்த காலத்தில் இயன் மருத்துவத்தின் மீது கொண்டுள்ள உவகையினால் பல்வேறு திக்குகளிலும் மருத்துவத்தில் சிறப்புற்று விளங்கிய மருத்துவப் புலமை மிக்க பண்டிதர்களை அழைத்து அவர்களின் மருத்துவக் குறிப்புக்களைப் பெற்று பன்னிரண்டாயிரம் பாடல்களுடன் பாடல் வடிவில் "**பரராசசேகரம்**" எனும் பெயரில் நூலொன்று உருவாக்கப்பட்டது. அவற்றை ஏழு பாகங்களாகத் தொகுத்து திரு.ஐ.பொன்னையா என்பவர் வெளியிட்டார். அவை சிதிலமடைந்து மேலதிக பிரதிகள் கைவசமின்றி அவற்றின் பிரதிகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. எனினும் இம் மருத்துவக் குறிப்புக்கள் அழிந்துவிடக்கூடாது என்ற ஆதங்கத்தில் அவற்றை மீள் பதிப்பு செய்ய முன்வந்திருக்கும் மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு எமது வாழ்த்துக்களை இச் சந்தர்ப்பத்தில் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

மேலைத்தேய மருத்துவத் துறைகளில் நாட்டம் கொண்ட எம்மவர்களில் பலர் இரசாயனக் குளிகைகளிலும், ஊசி மருந்துகளிலும் நாட்டம் கொண்டு கீழைத்தேய மருத்துவ முறைகளில் இருந்து விலகி மேலைத்தேய மருத்துவத்தை நாடிச் செல்கின்றனர். அதே தருணத்தில் மேலைத்தேயத்தில் வாழ்கின்ற பலர் கீழைத்தேய மருத்துவ முறைகளில் பயன்படுத்தப்படுகின்ற மருந்துகள், எண்ணெய்கள் மற்றும் குடிநீர் போன்றவை எந்தவித பக்கவிளைவுகளும் அற்றதாக, நிரந்தர வைத்திய முறைமையாக பூரண வைத்திய முறையாகவும் இருப்பதைக் கண்ணுற்ற இந்தியா போன்ற நாடுகளை நோக்கி அவர்களின் உடல் உபாதைகளைப் போக்கவும் நீண்ட நொடிய நோய்களை குணப்படுத்தவும் படை எடுத்து வருகின்றார்கள்.



இந் நிலையில் கீழைத்தேயத்திற்கே உரித்தான பக்க விளைவுகள் அற்ற மருத்துவ முறைகளை அழியவிடாது பாதுகாத்து எமது அடுத்த சந்ததிக்கு கையளிக்க வேண்டிய பாரிய பொறுப்பு எமக்குண்டு. அந்த வகையில் மீள்பதிப்பு செய்யப்படுகின்ற இந்த 07பதிப்புக்களும் எமது எதிர்காலத்தின் அரும்பெரும் சொத்தாக அமையவேண்டும் என வாழ்த்தி இந்த அரிய முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

நன்றி

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாண சபை.

## வடமாகாண கௌரவ சுகாதார அமைச்சரின் ஆசிச்செய்தி

பன்னீராயிரம் பாடல்களுடன் விரிந்த **“பரராச சேகரம்”** எனும் வரலாற்றுப் பொக்கிசமான வைத்தியநூலை வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் மீள்பதிப்பு செய்வதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

முன்னோர்களால் ஏட்டில் பாடல்களாக எழுதப்பட்ட இந்நூல் யாழ்ப்பாணம் ஏழாலையைச் சேர்ந்த திரு.ஐ.பொன்னையா அவர்களினால் ஏழு பாகங்களாக தொகுக்கப்பட்டு 1928 - 1936ம் ஆண்டு காலப்பகுதியில் வெளியிடப்பட்டாலும் அவற்றை மீள்பதிப்பு செய்யவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

காலத்தின் தேவையறிந்து இவற்றை மீளப்பதிப்பதற்கு முயற்சி மேற்கொண்ட வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் ஆணையாளர் டாக்டர் (திருமதி) சி.துரைரட்ணம் அவர்களை பாராட்டாமல் இருக்கமுடியாது.

மேலைத்தேய மருத்துவத்தின் மோகம் மக்களிடையே அதிகமாக இருந்தாலும் அதனை உருவாக்கிய மேலைத் தேயத்தவர்களே தற்போது சுதேச மருத்துவ முறைகளில் அதிக நாட்டம் காட்டுவது அதன் சிறப்புகளைக் கோடிட்டு காட்டுகின்றது.

மீள்பதிப்பு செய்யப்பட்ட இந்த புத்தகம் எமது சுதேச மருத்துவத்துறை மாணவர்களுக்கும், மக்களுக்கும் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

டாக்டர்.பத்மநாதன் சத்தியலிங்கம்,
சுகாதார அமைச்சர்,
வடக்கு மாகாணம்.



## பிரதம செயலாளரின் ஆசிச் செய்தி

ஒரு காலத்தில் சுதேச மருத்துவத்துறையில் இந்தியாவுக்கு இணையாக மிகவும் பயனுறுதியும் விளையபயனும் மிக்கதான மருத்துவ சேவையை வழங்குவதில் யாழ்ப்பாணம் முன்னணியில் இருந்தது. ஆயுள்வேத மற்றும் மூலிகை மருத்துவத்தில் மிகவும் நாட்டமும் நம்பிக்கையும் கொண்ட யாழ்ப்பாண இராஜ்யத்தை அரசாட்சி புரிந்த பரராஜசேகர மன்னன் அவனது காலத்தில் பல்வேறு புலமை மிக்க வைத்தியர்களால் கைக்கொள்ளப்பட்டு வந்த இந்த மருத்துவத்தை அழியவிடாது பாரம்பரியமாக நடைமுறைப்படுத்தும் நோக்கோடு 12,000 மருத்துவப் பாடல்கள் அடங்கிய ஏட்டுப்பிரதிகளை தனது காலத்தில் இருந்த மருத்துவ வியலாளர்களைக் கொண்டு ஆவணப்படுத்தினார்.

1928 - 1936 காலப்பகுதியில் ஏழாலையைச் சேர்ந்த காலஞ் சென்ற திரு.ஐ.பொன்னையா என்பவரால் ஏட்டுப்பிரதியாக இருந்த இம் மருத்துவக் குறிப்புப் பாடல்கள், ஏழு பாகங்களாகத் தொகுக்கப்பட்டு முதன் முதலாக நூல் மயமாக்கப்பட்டது. இந் நூலை ஆதாரமாகக் கொண்டே இன்றும் பாரம்பரிய சித்த, ஆயுர்வேத மருத்துவர்கள் மருத்துவம் செய்து வருகின்றனர்.

இயற்கை மூலிகைகளோடு இணைந்த சித்த ஆயுர்வேத மருத்துவமானது தற்போது அனேக நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வருகின்ற இக் காலத்தில் எமக்கு அரும்பொக்கிஷமாகக் கிடைக்கப்பெற்ற **“பரராசசேகரம்”** மருத்துவ நூலானது அழிந்து விடாதபடி மீண்டும் மீண்டும் மீள்பதிப்புக்குட்படுத்தி காத்து அடுத்து சந்ததியினருக்கு கொண்டு செல்ல வேண்டிய கட்டுப்பாடு வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் பாரிய பொறுப்பாகும்.

சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் படுகின்ற **“பரராசசேகரம்”** மீள்வெளியீட்டின் முயற்சி யாண்டு காலத்தோடொட்டிய அத்தியாவசியமானதும் மிகவும் பாராட்டப்பட வேண்டியதென்றாகும். இந்நூலின் மூலம் தமிழ்கூறு நல்லுலகெங்கும் பயன்பெற எல்லாம் வலல் இறைவன் துணை வேண்டி உளமார வாழ்த்துகின்றேன்.

அ.பத்திநாதன்
பிரதம செயலாளர்
வடமாகாண சபை

## செயலாளரின் வாழ்த்துரை

கலை பண்பாடுகளினால் சிறப்புற்ற யாழ்ப்பாண இராச்சியம் செழிப்புடனிருந்த பரராஜசேகர மன்னனின் ஆட்சியின்போது, அவன் முன்னிலையில் பல மருத்துவப் புலமையாளர்களைக் கொண்டு உருவாகியதே பரராசசேகரம் என்னும் பன்னீராயிரம் பாடல்களுடன் விரிந்த மருத்துவ நூலென வரலாற்றாளர்கள் கூறுவர்.

அன்று முதல் முறைசார் கல்வியூடாக மருத்துவம் போதிக்கப்படும் வரை மருத்தவத்தையே தம் உயிர்மூச்சாகக் கொண்டு வாழ்ந்த மருத்துவப் பரம்பரையினர் பரராசசேகரத்தின் ஏட்டுப் பிரதிகளை தமது அரும்பெரும் சொத்தெனவும், பிரதான உசாத்துணையெனவும் கொண்டு பேணிப்பாதுகாத்து வந்துள்ளனர்.

ஏழாலை ஐ.பொன்னையா எனும் மருத்துவரின் அயராமுயற்சியின் பயனாக ஏழு பாகங்களாக எண்ணாயிரம் பாடல்களுடன் அசேற்றப்பட்ட நூலாக பரராசசேகரம் கடந்த நூற்றாண்டில் கிடைக்கப் பெற்றிருப்பினும் காலவோட்டத்தால் அவற்றிலேற்பட்ட சிதைவுகளினாலும், கிடைத்தற் கரியனவாயிருப்பதாலும் அவற்றை மீள்பதிப்பு செய்து எதிர்காலத்திற்கும் கிடைக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்ற வடமாகாண சுதெச மருத்துவ திணைக்களத்தின் அரியமுயற்சி பாராட்டுக்குரியதாகும்.

ஏழுபாகங்களாக உள்ள வெவ்வேறு ரோகங்களிற்கான நிவாரணம் தொடர்பான இந்நூலில் 1ம் 2ம் 5ம் 6ம் 7ம் பாகங்கள் மீள்பதிப்பு செய்யப்படுகின்றன.

நவீன காலத்தின் தேவைக்கேற்ப இந்நூலின் பித்தரோகம் என்ற பகுதியை இணையத்தில் ஒரு நண்பர் பதிவேற்றியிருந்தமையைக் காணுகையில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த முயற்சியின் பலன்கள் எமது சந்ததியனருக்கு நன்மை பயப்பதாக என வாழ்த்தி நிற்கின்றேன்.

சி.திருவாகரன்
செயலாளர்.
சுகாதார சுதேச மருத்துவ நன்நடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு.
வடமாகாணசபை



## மாகாண ஆணையாளரின் செய்தி

சித்த மருத்துவமானது "தமிழர் மருத்துவம்" எனவும் "தமிழர் பாரம்பரியம்" எனவும் போற்றப்படும் மருத்துவ முறையாகும். ஏனைய சுதேச மருத்துவ முறைகளைப் போலவே சித்த மருத்துவமானது தமிழர் வரலாற்றில் பிண்ணிப்பிணைந்திருப்பதை வரலாற்று நூல்கள் மூலம் தெரிந்து கொள்ள கூடியதாக இருக்கின்றது. இலங்கையைப் பொறுத்த வரை இலங்கையை ஆண்ட மன்னர்கள் பலர் சிறந்த வைத்தியர்களாக இருந்ததை பல வரலாற்று நூல்கள் எடுத்தியம்பி உள்ளன. இவர்களுள் "செகராஜசேகர மன்னன்", "பரராஜசேகர மன்னன்" ஆகியோரது பெயர்கள் ஈழத்து சித்த மருத்துவ வரலாற்றில் முக்கியத்தவம் பெறுகின்றன. இவர்களது காலத்தில் சித்த மருத்துவமானது சிறப்புற்று இருந்தமைக்கு "பரராஜசேகரம், செகராஜசேகர வைத்தியம்" எனும் நூல்கள் சான்று பகர்கின்றன. இந்நூல்களில் குறிப்பிடப்படும் மருத்துவ முறைகள் எமது நாட்டிற்குரிய தனித்துவமான சித்த மருத்துவ முறைகளை அடிப்படையாகக் கொண்டதாக கருதப்படுகிறது. மேலும் "பரராஜசேகரம்" எனும் நூலானது யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர்களது பாட நூல்களில் ஒன்றாக அமையப்பெறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான முக்கியத்துவம் வாய்ந்த வைத்திய நூல்களில், பல சிதிலமடைந்து அரகிப் போய் வருவது சித்த மருத்துவத்தின் அபிவிருத்திக்கும் ஒரு பாரிய சவாலாகவே காணப்படுகிறது. எனவே 1928 - 1936ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏழாலையைச் சேர்ந்த ஐ.பொன்னையா என்பவரால் தொகுக்கப்பட்ட **"பரராஜசேகரம்"** எனும் ஏழு பாகங்கள் கொண்ட நூல்களுள், எமக்கு கிடைக்கப் பெற்ற ஐந்து பாகங்கள், வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தால் மீள் பதிப்பு செய்யப்படுகின்றன.

இந்த மீள் பதிப்பின் போது ஐ.பொன்னையா அவர்களால்

குறிப்பிடப்பட்டிருந்த பிழைகள் திருத்தப்பட்டிருப்பதுடன் எழுத்துச் சீர்திருத்தமும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களம் இதுவரை "ஒன்பது விஷ ஆரூடம் - பத்மநாம அய்யர், "நாடி தர்ப்பனம்" சிதம்பரநாத வைத்தியர்" ஆகிய நூல்களை மீள் பதிப்பு செய்து வெளியிட்டுள்ளது. இந்த வரிசையில் பரராசசேகரத்தின் ஐந்து பாகங்களை வெளியிடுவதில் திணைக்களம் என்ற வகையிலும், சித்தமருத்துவர்கள் என்ற வகையிலும் நாம் பெருமை கொள்வதோடு இந் நூலை வெளியிடுவதற்காக தம்மிடம் இருந்த பிரதிகளை எமக்கு தந்துதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நாம் நன்றியை தெரிவித்தக் கொள்கின்றோம்.

எமது சித்த மருத்துவத்தைப் பேணி பாதுகாத்த அனைவருக்கும் இந் நூலை நாம் சமர்ப்பணம் செய்கின்றோம்.

டாக்டர்.(திருமதி).சி.துரைரட்ணம்,
மாகாண ஆணையாளர்,
சுதேச மருத்துவ திணைக்களம்,
வடமாகாண சபை.





# பரராசசேகரம்

## முதலாம் பாகம்

## சிரரோக நிதானம்

பதிப்பாசிரியர்
யாழ்ப்பாணத்து ஏழாலை
சுதேச வைத்தியர்
ஐ.பொன்னையாபிள்ளை

யாழ்ப்பாணம் சைவப்பிரகாசயந்திரசாலை
விபவஃ புரட்டதிமீ
1928.

உரிமை பதிவுசெய்யப் பெற்றது.

## நூன்முகம்

"பாரராசசேகரம்" எனப்பெயர்பெற்ற இவ் வைத்திய நூல் இற்றைக்கு 100 ஆண்டுகளின் முன் யாழ்ப்பாணத்து நல்லூரில் இருந்து அரசுசெய்த பரராசசேகர மகாராசாவின் முன்னிலையில் இயற்றப்பட்டது. இயற்றினோர் யாவரென்பது புலப்படவில்லை. அவன் சபையிலிருந்த பண்டிதர்கள் பலர் இதனை இயற்றித் தொகுத்தார்களெனக் கூறுவாருமுளர் வேறுங்கூறுவர்.

இந் நூலின் செய்யுட் டொகை கஉ000 எனவும் அத் தொகை பற்றி "பரராசசேகரம் பன்னீராயிரம்" என இதற்கு ஒரு பெயர் வழங்குவதுமுண்டு எனவுங் கூறுவர். ஆயினும் அவை முழுவதும் அமைந்த பிரதி ஒன்றேனும் இக்காலத்தில் கிடைப்பது அரிதாயிருக்கிறது. ஆகையால் அதன் செய்யுட்டொகை இவ்வளவு என்பது அறிவதரிதாயிற்று. இந் நூற்பிரதிகளை வைத்திருப்போர்தாமும் அவற்றைப் பிறர்க்குக் காட்டவும் உடன்படுகின்றிலர். அவர் மனப்பான்மையை என்னென்போம்.

ஓலைச்சுவடிகளைப் படிப்போரும் எழுதுவோரும் அருகிய இக்காலத்தில் இத்தகைய நூல்கள் அச்சிற் பதிப்பிக்கப்படா தொழியின் இப்போது கிடைப்பவைதாமும் பின்னளில் அழிந்தொழிந்துபோம். அதனால் "வைத்திய விளக்கம்" என்னும் நூற் பதிப்பின் பின் இரண்டாவதாக இந்நூலை அச்சிட்டு வெளிப்படுத்த எண்ணினோம். யாம் முன் பதிப்பித்து வெளிப்படுத்திய "வைத்திய விளக்கம்" என்னும் நூலில் குற்றங்கள் பல கூறிய வைத்தியர்களும் சிலர் உண்டு. குற்றங்கள் காணப்படின் அவற்றைத் திருத்தி வெளிப்படுத்துமாறு அந்நூன் முகவுரையில் விண்ணப்பித்திருந்தும் அவ்வாறு செய்யாது குறை கூறுவதனால், அவர்காம் பயன் என்னையோ அறியேம். அரிய நூல்களை வெளியிடுதல் தகாதென்று கூறினரும் பலருளர் அவர் மனவியல்புக்கு யாமென்செய்வோம்.

இவ்வெளியீட்டிலும் குறை பல கூறி இடர் விளக்கப் பலர் முன்னிற்பார்கள் என்பதையும் யாமறிவோம். ஆயினும் அதை யாம் பொருட்படுத்தவேமாட்டோம். தங்கள் தங்கள் ஏடுகளிற் காணப்படுபவையும், தாங்கள் சொல்லுபவையுமே



உண்மையானவை என்றும், ஏனையவை எல்லாம் தப்பானவை என்றும் ஒவ்வொருவரும் வழக்குத் தொடுப்பர். இத்தகைய வீண்வழக்குகளைச் சிந்திப்பதினால் நமக்கு ஆவது ஒன்றுமில்லை. இப்போது கிடைத்த பிரதிகளை ஒப்புநோக்கி ஆராய்ந்தே இந்நூலை யாம்வெளியிடத் தொடங்கினோம். பிழைகாண்போர் அவற்றைத் தயை கூர்ந்து எமக்கு அறிவிப்பாராயின் அடுத்த பகுதியில் அவர்களுடைய பெயரோடு அவற்றை வெளியிடுவோம்.

பல பிரதிகளை தேடி ஒப்புநோக்கிச் செவ்வை செய்து ஒரு நூலை வெளியிடுவதிலிருக்கும் பிரயாசம் எவ்வளவு என்பதை அத்தகைய வேலை செய்வோரே அறிவர். வெளிவந்த பின் வீட்டிலிருந்துகொண்டு குறைகூறுதல் எல்லார்க்கும் எளிதான காரியமாகும்.

இப்போது இந்நூலில் நம்மிடங் கிடைத்துள்ள செய்யுட்தொகை ஏழாயிரத்துக்கு மேலாகும். அவற்றை நான்கு அல்லது ஐந்து பாகங்களாகப் பிரித்து வெளியிடவே முதலிற் கருதினோம். ஆயினும் பல காரணங்களால் அவ்வெண்ணம் கைகூடவில்லை. ஆதலின் மாதந்தோறும் பகுதிபகுதியாக இந்நூலை வெளியிடும் நோக்கங்கொண்டு இம்முதற்பகுதியை இப்போது வெளிப்படுத்தினோம் பொதுநலக் கருத்துடைய அறிஞர்கள் இந்நன்முயற்சியை ஆசரிப்பார்கள் என்னும் நம்பிக்கையினாலேயே எம்மாற் செய்தற்கரிய இவ்வேலையிற் கையிட்டோம். யாழ்ப்பாணத்துள்ள வைத்திய நூல்கள் பலவற்றையும் இவ்வாறே வெளியிடுதல் கூடும் என்பதும் இதை மாத வெளியீடாக வெளியிட நினைத்ததற்கு ஒரு காரணமாம்.

இந்நூலை அச்சிடத் தொடங்கிய பின் கிடைத்த ஏட்டுப் பிரதி ஒன்றிற் கண்ட பாயிரச் செய்யுட்களில் இன்றியமையாததாயுள்ள சிலவற்றை அச்சிட்டு முதலிற் சேர்த்துள்ளோம். இன்னும் அப்பாயிரத்தில் அங்காதிபாதம், பதார்த்தசாரம், நாடிவிதி, நோயின் அட்டவணை, மூலிகைத் தொகுப்பு, சரக்குத் தொகுப்பு முதலியனவாக இருபத்துநான்கிற்கு மேற்பட்ட பிரிவுகளுள்ளன. அங்காதிபாதம் ச00 செய்யுட்களுடையது. அதை, பிறநூற் கருத்துக்களைத் தழுவி எழுதப்படும் விரிவான குறிப்புரையுடன் தனிப்புத்தகமாக அச்சிடுதல் தக்கதாமென்று சிலர் கூறியதனால் இதிற்சேராது தவிர்க்கப்பட்டது. மற்றைய வேறு பிரதிகள்

கிடைக்குமாயின் ஆராய்ந்து திருத்திப் பின்னர் வெளியிடப்படும். நோயின் அட்டவணை என்னும் பிரிவில், இன்ன இன்ன நோய்க்கு இன்ன இன்ன நாடிகள் உள என்பதும், இன்ன இன்ன மருந்துகள் ஆவன என்பதும் தொகுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. அது நூலிறுதியிற் சேர்க்கப்படும்.

கிடைத்த ஏட்டுப்பிரதிகள் சிலவற்றின் முகப்பில் தன்வந்திரி வைத்திய சிந்தாமணி என்னும் பெயர் எழுதப்பட்டு இருக்கிறது. அதனால் பரராசசேகரம் வேறு என்றும் இது "தன்வந்திரி செய்த சிந்தாமணி" என்னும் நூலே என்றும் சிலர் கூறுகின்றனர். தன்வந்திரி என்பார் ஆரியநாட்டிலிருந்த ஓர் சிறந்த வடமொழி வைத்தியர். அவர் தமிழிலே வைத்திய நூலாயினும் செய்தாரல்லர். தன்வந்திரி செய்த வைத்தியநூலாயினும் செய்தாரல்லர். தன்வந்திரி செய்த ஆயுள்வேதநூலைப் பெரும்பாலும் தழுவி இந்நூல் இயற்றப்படும் என்று காப்புச் செய்யுள் கூறுகின்றமையின், அதவும் இந் நூற்கு ஒரு பெயராக வழங்குகின்றபோலும். இப்போது வெளிவரும் சிரரோகப் பகுதி இந்நூலைச் சேர்ந்ததன்று என்றும், நாதமுனி வைத்தியத்திலுள்ளது என்றும் வழக்கிடுவாருமுளர்.

பரராச சேகரத்தைச் சேர்ந்த எப்பகுதியாயினும் வைத்திருப்போர் எமக்கு அனுப்பிவைப்பராயின் மிகுந்த நன்றியறிதலோடு ஏற்றுக்கொண்டு, இவ்வெளியீட்டை நூல் முடியுற்காறும் அவர்களுக்கு விலையில்லாது அனுப்பிவருவோம். பிரதிகள் தந்தும் வேறு பலவகையில் உதவிசெய்தும் வரும் அன்பர்களது பெயர்கள் அடுத்த பகுதி முதல்வெளிவரும்.

சிரரோகப் பகுதி முடிந்தபின் புத்தகமாய்க் கட்டுதற்கு வேண்டிய முகப்பு முதலியனவற்றைத் தனியே அச்சிட்டு அனுப்புவோம்.

ஏழாலை, இங்ஙனம்,
பிரபவஹு பங்குனிமீ அ.பொன்னையா



# சிறப்புப்பாயிரம்

**இஃது சுன்னாகம்**
**காவியபாடசாலை தமிழ்த் தலைமை ஆசிரியரும்**
**வித்துவானும் ஆகிய**
**புன்னாலைக்கட்டுவன்**
**பிரஹ்மஸ்ரீ.சி.கணேசையரவர்களியற்றியது**

திருவளர் மதுரைத் தென்றமிழ்ச் சங்கப்
புலவரு ளொருவவராய்ப் புவியிசை நாட்டிய
பூதந தேவனர் முதலிய சான்றோர்
தோன்றுதல் கிடமாந் தொன்றுகொள் சீர்த்தித்
திரைவளை யீழத்து வடபா லோங்கும்
யாழ்ப்பா ணத்து நல்லூர் நகரா
அரசீருந் தாண்டு பல்லுயிர் புரத்தலோ
டமையா துளமா ருளுளது துரப்ப
கல்லுயிர்க் கினிது நாடியோர் சந்தந்
நிறீஇப் பன்னூனீடு நுண் மதியின்
ஆய்தல் செய்தும் அவைபல வியற்றியும்
அருந்தமிழ், புரந்த திருந்துநல் லறிஞன்
பரராசசேகரப் பார்த்திபன் பெயரோடு
கிழமைகொண்டிலகிய கெழுமிய தென்றிசைப்
பொருப்பன் முதலோர் புகன்றமுன் வைத்திய
நூல்கள் பலவுந் நுண்ணிதின் நோக்குபு
அவற்றிடை வேண்டுப வமைத்தும் மதியொடு
பொருந்துவ புகுத்தியும் பொற்பார் மக்கட்
கிணங்கக் கால தேயத் தியல்புகள்
நாடிப்பாவி னவிலவற் றினத்திற்
செய்துமுன் னூலினுந் தலைமையொடு நிலவிய
பல்பிணிக் தமிழ்தெனப் பாரோரேத்தும்
பனுவறன்னைப் பல்சுவடி நோக்கித்
திருத்திப் பல்பிழை செவ்விதனடி
அச்சிற் பதித்தன னரும்பொரு டன்னெடும்
அவனெவனென்னின்:

முத்தமிழ்த் துறையின் முறைபோ நிகியமதி
இத்தலம் புகழச் சுத்தாத் துவித
சைவசித்தாந்த நூலினுஞ் சென்ற
வித்தக னுத்தமன் பத்திகொளுளத்தன்
சைவத் திருயல்பு தெரிக்குபு பலரை
உய்யத் தந்த உரையினன் விரையார்
உள்ளக் கமலத் துள்ளார் பொருளைக்
கள்ளமில ஞானக் கனியை யுணர்ந்தே
எள்ளளலி லின்ப மெய்துமியல்பின்னன்
பிணியு மதுவரு வாயு நாடி
தீர்க்கும் பண்பும் பார்க்குஞ் செயலாற்
பலர்பிணி நீக்கி மகிழச் செய்தலிற்
சீரியர் தம்முட் சீரியன் கூரியன்
அறஞ்செய விரும்புக் திறம்பயில் நெஞ்சன்
பள்ளத் தாமரைக் கள்ளூற்றர் கொளும்
வண்டின மாடிப் பாடும் பண்ணைப்
போர்மலை தெரிக்கும் பொழில் சூழ்கின்ற
ஏழாலைப்பே ரெய்து மூரினன்
வேளாண் குலத்தினன் மெய்யொழுக் கத்தினன்
ஐயம் பிள்ளை யண்ணல் தந்த
பொன்னையபிள்ளைப் புலமையோனே





# பரராச சேகரம்

## பாயிரம்

## கடவுள் வணக்கம்

### விநாயகர்

தாரணியோர் மிகப்புகழ்தன் வந்ரி செய்த
        தகவுடைய சீர்த்திபெறு மாயுள் வேதப்
பேரணியும் வாகடத்தைப் பெரிது பேணிப்
        பெட்புடைய தமிழ்ப்பாவாற் பேசும் வண்ணம்
சீரணியுந் திருமாலு மயனுங் காணாச்
        சிவபெருமா னளித்தருளு மொருவெண் கோட்டுக்
காரணிமெய் பைங்கரத்து நால்வாய் முக்கட்
        கடவுளிரு பதயுகளங் கருத்துள் வைப்பாம் (க)

செந்திரு நிறையொளி திகழுங் கிம்புரி
அந்தியின் மதியென வலர்ந்த கோட்டுடைச்
சுந்தர நிறைமதித் துதிக்கை யானையை
வந்தனை மலர்கொடு வணங்கி வாழ்த்துவாம் (உ)

### சுப்பிரமணியர்

சூரணைத் துணைவரைச் சுற்றுஞ் சேனையைக்
கூரிய வேலினிற் குறைத்து வானவர்
வாரள மங்கையை வதுவை செய்திடும்
சீரிய வேள்பதஞ் சிந்தை செய்குவாம் (ங)

### சரசுவதி

வந்தளி மதுவுண மலர்வெண் டாமரை
அந்தநல் லாசன மமர்ந்து பல்லுயிர்
தந்தவர் நாவினிற் றரிக்குந் தன்மைசேர்
சுந்தர வாணியைத் தொழுது போற்றுவாம் (ச)

### அவையடக்கம்

அந்தமி லாயுரு வேத மாயுயர்
சுந்தர மந்திரி சொல்சிந் தாமணிச்
சந்தநல் வடமொழி தமிழ்வ ளம்பெற
எந்தைதன் னருளிளா லியம்பு வாமரோ (ரு)